# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 9

உயர்ந்தவன், தாழ்ந்தவன், பிராமணன், சூத்திரன், செல்வந்தன், ஏழை, ஆண்கள், பெண்கள் ஆகிய வித்தியாசங்களை நோய் பார்ப்பதில்லை. அனைவரும் அதன் பிடியில் அகப்பட்டுத் தவிக்கக் கூடியவர்களே. வியாதி வந்தால் மருந்து சாப்பிடும் உரிமையும் அனைவருக்கும் உண்டு. அதைப்போலவே, பவரோகத்தை (பிறப்பு, இறப்பு, என்னும் நோய்) உடைய மாந்தர்கள் அனைவரும் சர்வ ரோக நிவாரணியான பிரம்ம வித்தை எனப்படும் மருந்தை உட்கொள்ள அதிகாரம் பெற்றவர்களே. பிணியாளர்கள், அவரவர்களுடைய தகுதிக்குக் தக்கபடி மருந்து துக்கு விலை தந்து, பெற்று உட்கொள்வதைப் போல அவரவர்களுடைய சாதகத்துக்குத் தகுந்த அளவு ஆன்மீக முன்னேற்றத்தை அடைவார்கள். இங்கே கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு.

மருந்தை உட்கொள்ளும் போது நியதி தவறாது பத்திய முறையைக் கூட எவ்வாறு கவனித்துக் கொள்ள வேண்டுமோ. அவ்வாறே பிரம்ம தத்துவத்தையும், நிரந்தரமான பிரம்ம பாவத்தோடு உட்கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்த பத்திய முறையான தர்மம், பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகியவைகளையும் முறைப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும். மருந்தையும் பத்தியத்தையும் சரியான படி அநுசரிக்கும் மனிதன் நோயின் பிடியில் இருந்து விடுபடுவது போல, பிரம்ம தத்துவத்தைப் பயிலும் மனிதனும் மேற்படி பத்திய முறைகளைத் தவறாது அநுசரித்தால் பவரோகத்தின் பிடியில் இருந்து விடுபடலாம். பிரம்மோபதேசத்தைப் பெற்றவர்கள், தர்மங்களைச் சரியாக நிறைவேற்றாமலும், ஒழுங்காகச் சாதகம் செய்யாமலும், நற்பண்புகள் அற்றவர்களாகவும் இருந்தால் அவர்கள் பிராமணனாயினும் சூத்திரனாயி னும், சக்கரவர்த்தியாயினும், சண்டாளனாயினும், பவரோகத்திலிருந்து விடுபட முடியாது; பரப்பிரமத்தை அடைய முடியாது. பிரம்ம வித்தை அனைவருக்கும் பொதுவானதே. ஆனால் அதை அடையும் தகுதியை முதலில் சம்பாதித்துக் கொள்ளுவது நல்லது.

நோயுற்ற ஒவ்வொருவருக்கும் மருந்து சாப்பிடும் உரிமை உண்டு என்றாலும், விலை உயர்ந்த மருந்தாக இருந்தால் அதனை வாங்கும் சக்தி,

பத்திய முறையை அனுசரிக்கும் திறமை இரண்டும் தேவை. இந்த இரண்டு தகுதியும் இல்லாத போது, பாவரோக மருத்துவர் மருந்து சாப்பிடும் உரிமையை மறுத்துவிடுவார். விலை உயர்ந்த மருந்துகளை வாங்கி உண்ணும் சக்தி இல்லாத ஏழைப் பிணியாளர்களுக்கு, தர்மசீலர்களான சில வைத்தியர்கள் தாமே அந்த மருந்தை வாங்கித் தருவதில்லையா? பாவரோக நோயாளிகளின் தகுதி, சக்தி (கடந்த பிறவிகளின் பாவ, புண்ணியம்) இவைகளைக் கவனித்து, மருந்தையும் தருகிறார் அவர்.

இனியும் ஒரு பிரச்சனை. பிரம்ம வித்தையைக் கற்றுக் கொள்ளும் உரிமை பெண்களுக்கு உண்டா, இல்லையா என்பதே அது. இந்தப் பிரச்சனைக்கு முன்பே பதில் அளித்திருக்கிறேன். பெண்களுக்கு அந்தத் தகுதி இல்லையென்றால் மகா விஷ்ணு பூதேவிக்குக் கீதையின் சாரத்தைப் போதித்திருக்கமாட்டார். பரமசிவன் பார்வதிதேவிக்கு குருகீதை போதித் திருக்கமாட்டார். கீதையில், "தரோவா…" என்றும், குரு கீதையில், "பார்வத்யுவாச" என்றும் சொல்லப்பட்டிருக்கும்?

அந்த இரு வார்த்தைகளும் தாராவும், பார்வதியும் பிரம்ம வித்தையைப் பற்றிய விவாதத்தில் பங்கு கொண்டார்கள் என்பதைத் தெளிவாக்குகின்றன. ஈஸ்வரன் பார்வதிக்கு யோக சாஸ்திரத்தையும், மந்திர சாஸ்திரத்தையும், உபதேசிக்கவில்லையா? ப்ரஹதாரண்யகோபநிஷத்தில் யாக்ஞவல்கிய மகரிஷி மைத்ரேயியிக்கு பிரம்ம வித்தையை உபதேசித்ததாகக் குறிப் பட்டுள்ளது. இவ்வளவு ஏன்? வேதத்திலேயே கர்ம காண்டம், ஞான காண்டம் என்று இரண்டு காண்டங்கள் உள்ளன. அதில் கர்ம காண்டம், அறியாமையால் உலக சுகங்களில் மூழ்கியுள்ள அஞ்ஞானிக்கும், ஞான காண்டம் விஞ்ஞானிக்கும் பயன்படுகிறது. சாஸ்திரங்களிலும் கூட பண்டிதர்களின் உபதேசங்கள், ஆத்ம ஞான அனுபவமும் பாண்டித்தியமும் பெற்ற ஞானிகளின் உபதேசங்கள் என இருவகையுண்டு. இதிலும் எல்லாம் இறைவனின் செயலே என்ற நினைவோடு, சகல தர்மங்களையும் அர்ப்பணிக்கும் மனோபாவம் பெற்றவர்களின் அறிவுரைகள்; எல்லா உயிரினங்களிலும் உள்ளுறையும் பொருள் ஆன்மா ஒன்றே என்ற நினைவோடு பேத உணர்வை மறந்து, அசையும், பொருள் அசைய பொருள்

ஆகிய அனைத்தின் நலனுக்காகவும் பாடுபடும் மகானுபாவர்களின் வார்த்தைகள் ஆகிய இவைகளே சத்திய வாக்குகள்,

ப்ரஹதாரண்ய உபநிஷத் சன்னியாசம், பிரம்மச்சரியம் ஆகிய அத்யாத்மிக நற்பண்புகளோடு கூடிப் பேரொளி வீசிப் பிரகாசித்த கார்க்கி, மைத்ரேயி, மகாபாரதத்தில் சுலபா என்ற யோகினி முதலான பெண்மணிகளின் உன்னத உத்தம வரலாறுகளைக் காணலாம்.

ஆனால் முதலில் அவர்களின் தர்ம நெறிகள் எப்படிப்பட்டவை என்று தெரிந்து கொண்டு, அந்த நெறிகளைக் கையாண்டு பார்த்துத் தெரிந்து கொண்ட பின்னரே அவர்களின் உயர்வைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். சூடா, மதாலஸா முதலான பெண்மணிகள் கிருஹஸ்தாசிரமத்தில் இருந்து ப்ரம்ம ஞானத்தை அடைந்ததாக யோகவசிஷ்டத்திலும், புராணங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. சாஸ்திரங்களை ஊன்றிப் படிக்காத காரணத்தால் தான் ஐயம் தோன்றுகிறது.

பிரம்மச்சாரிணியான கார்க்கி, கிருஹஸ்த தர்மத்தை மேற் கொண்ட சூடா, வானப்பிரஸ்தத்தை மேற்கொண்ட மைத்ரேயி, சன்னியாசினியான சுலபா யோகினி ஆகியவர்கள் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் என்றால், அது அவர்களுடைய பவித்திரமான இதயங்களையும், புனிதமான செயல்களையுமே காட்டுகிறது. பெண்கள் இதைப் புரிந்து கொண்டு அந்த பெண்மணிகளைப் போல உயரமுயற்சிக்க வேண்டும்.

லௌகிக சாஸ்திரங்களைப் போதிக்கும் ஆசிரியரைக் காட்டிலும் குலகுரு பத்தின் மடங்கு உயர்ந்தவர். குலகுருவைக் காட்டிலும் தந்தை நூறு மடங்கு உயர்ந்தவர். தந்தையைக் காட்டிலும் தாய் ஆயிரம் மடங்கு உயர்ந்தவள் என்று மனுஸ்மிருதி கூறுகிறது. தர்ம சாஸ்திரங்கள் அனைத்தும் மனுஸ்மிருதிக்கு கட்டுப் பட்டவைகளே அவைகள் அனைத்துக்கும் ஆதாரமானது மனு ஸ்மிருதியே. அப்படிப்பட்ட மனு ஸ்மிருதியிலேயே தாய்மைக்கு எவ்வளவு சிறப்பளிக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள்! செல்வத்துக்கு அதிபதியான லக்ஷ்மிதேவி பெண்ணினத்தைக் சேர்ந்தவள், இல்லையா? பெண்களுக்கு முடங்கள் வரையத் தொடங்கு முன், "லக்ஷ்மியை

போன்ற" என்று தொடங்கி எழுதுகிறார்கள். இந்த உண்மையையும் மறக்கக் கூடாது. அவதார புருஷர்களான ஸ்ரீ ராமர், கிருஷ்ணர் ஆகியவர்களும், சங்கரர், ராமானுஜர், மத்வர் போன்ற மத ஆசிரியர்களும், புத்தர், ஏசு கிறிஸ்து, முகம்மது போன்ற ஞானிகளும் பெண்ணின் கருப்பையில் இருந்து தோன்றியவர்களே, இல் லையா? பவித்திரம் நிறைந்த இந்தப் புருஷர்களைத் தம் கருப்பையில் தாங்கி உலகுக்கு அளித்த உத்தமத் தாய்மார்கள் சக்தியின் வடிவமானவர்கள். சத்தியவதிகளான அந்தத் தாய்மார்களின் குண நலன்களையும், அவர்கள் ஏற்று நடத்தி வந்த நித்திய தர்மங்களையும், தாமும் மேற்கொண்டு ஒழுகி வரும் பெண் மக்களுக்குப் பிரம்ம ஞானத்தைக் கற்றுக்கொள்ள சகல அதிகாரங்களும் உண்டு. இதை யாராலும் மறுக்க முடியாது. இந்த விதமான பத்திய முறைகளை ஏற்றுக்கொள்ளாமல், நோய் மட்டும் நீங்கிவிட வேண்டும் என்றால், எப்படி?

உண்மையை ஆராய்ந்தால் ஆத்மாவுக்கு ஆண் பெண் என்ற வித்தியாசமில்லை. ஆத்மா நித்யமானது, பவித்திரமானது, மீட்சி வடிவானது. சுயம்பிரகாச சொரூபமானது. இந்த ஆத்ம ஞானம் பெற்றவர்களே அந்த உத்தமப் பெண்மணிகளின் நிலையை அடைய முடியும். கலைகளுக்கு அதிபதியான சரஸ்வதி, செல்வத்துக்கு அதிபதியான லக்ஷ்மி, ஞான ஸ்வரூபிணியான பார்வதி ஆகிய மூவரும் பெண்களே அல்லவா? இந்த உண்மைகளை அறிந்து கொண்டால் ஒரு சிலவற்றைப் பெற பெண்களுக்குத் தகுதி இல்லையென்றாலும், பிரம்ம தத்துவத்தை அறியவும், பிரம்மத்தை வழிபடவும். முக்தியைப் பெறவும், பிரம்மச்சரியம் போன்ற விரதங்களை மேற்கொள்ளவும் பெண்கள் தகுதியற்றவர்கள் என்று எவ்வாறு சொல்ல முடியும்? உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சிங்கம் தன் சக்தியை மறந்து இருப்பது போல மாய உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் மனிதர்கள் தங்கள் தெய்வீக சக்தியை அறிந்து கொள்ளாமல், சாஸ்திரங்களில் பிரம்ம வழிபாடு பெண்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்று அறியாமை, வெறுப்பு காரணமாகச் சொல்வார்கள். சாஸ்திரங்கள் அவ்வாறு கூறவில்லை.

உலகத்துக்கு சாஸ்திரங்கள் கண்கள் போன்றவை. அவைககளின் படி, அவைகளின் விதிளைக் கைக்கொண்டு நடப்பது மனிதனின் முதற்கடமை. இன்றைக்கு முதலாவதாக செய்ய வேண்டிய சிறந்த செயலும் அதுவே.

சாஸ்திரங்களை முழுமையாகத் தெளிவாகத் தெரிந்து கொண்டால், அதில் உள்ள கருத்தைக் குறித்து விவாதம் செய்யவேண்டிய அவசியமே நேராது. தனக்கு இசைவான ஒன்றிரண்டு செய்திகளை எடுத்துக் கொண்டு சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்று வாதாடுவது சரியல்ல. சாஸ்த்திரங்களை முழுமையாகப் பரிசீலனை செய்யாமல், அவைகளுக்கு மாறான செயல்களில் ஈடுபடுவதும் தவறு. அவனைப் பாவங்கள் சூழும். சாஸ்திரங்களுக்கும், தர்மங்களுக்கும் ஒரு நாளும் தடையாக இருக்கக் கூடாது. தடையாக நிற்பது என்பது என்ன, தடை செய்ய வேண்டும் என்ற நினைவே பாவச் செயல்தான். இன்றைக்கு உலகம் இந்த நிலைக்கு வந்திருக்கிறது என்றால், சாஸ்திரங்களில் நம்பிக்கை கொள்ளாமையும், சாஸ்திரதர்மங்களை மேற்கொள்ளாததுமே காரணம். இது பெரிய வீழ்ச்சியுயே.

சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள பிரம்ம ஞான இயல்புகள் அற்றவன், அன்றாட நியமங்களில் சாஸ்திர சம்மதமான செயல்களைச் செய்து, முக்தியைப் பெற முயல வேண்டும். எல்லாச் சாஸ்திரங்களையும் படித்த பின்னரும் ஒருவனுக்குப் பிரம்ம ஞானம் ஏற்படவில்லை என்றால், அந்தப் படிப்பு முழுவதும் வெறும் சுமையேயன்றி, அதனால் பயன் ஏதும் இல்லை. சகல சாஸ்திரங்களையும் படித்தும், அதன் சாரத்தை அறிய மனிதன் பலவித சுவைகளையுடைய உண்பொருள்களில் இடப்பட்டுள்ள அகப்பைக்கு ஒப்பாவான். சாஸ்திரங்களின் சாரத்தை அறியாமல் தம்மைத் தாமே பண்டிதர்கள் என்று நினைத்துக் கொண்டு, மற்றவர்களுக்கு உபதேசிக்க முற்படுவது குருடனுக்கு மற்றொரு குருடன் வழிகாட்டியாவதைப் போன்றதே என்று முண்டகோபநிஷத் கூறுகிறது. சாஸ்திர அறிவு இல்லை யென்றாலும், பயிற்சியின் மூலமாக ஞானம் கைவரப் பெற்றவன், தன்னுடைய அனுபவத்தின் மூலமாகத் தானும் முன்னேறி, மற்றவர்களுக்கும் வழிகாட்டும் வல்லமை பெறுவான்.

அறியாமை நிறைந்தவனுக்குச் சாஸ்திரங்கள் தேவையில்லை. எப்பொழுதும், எந்த நிலையிலும் பிரம்மத்தோடு ஒன்றி நிற்கும் மகாபுருஷர்களுக்கும் சாஸ்திரங்கள் தேவை இல்லை. சத்தியத்தைப் பற்றி நிற்பவனுக்கும், அறவழியை மேற்கொள்ளுபவனுக்கும் தொடக்கத்தில்

துன்பங்கள் நேருவது இயற்கை. அதற்காக மனம் தளராமல், இந்தப் பயிற்சியின் மூலமாகத்தான் பெறப்போகும் ஆத்மானந்தத்தை யோசித்து, ஆரம்பத் தடைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அறிஞன், இந்த சத்தியத்தை உணர்ந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுவான். அறிவற்றவன் தளையில் அகப்பட்டு துன்புறுவான்.

மனிதனின் மனம் போக்குக்கு ஏற்ப காலவரையறைகள் (யுகங்கள்) ஏற்பட்டன. கிருத யுகத்தில் தர்மம் நான்கு பாதங்களால் நடந்தது என்றும், திரேதா யுகத்தில் மூன்று பாதங்களாலும், துவாபர யுகத்தில் இரண்டு பாதங்களாலும் நடந்தது என்றும், கலியுகத்தில் ஒரேயொரு பாதம் கொண்டு நொண்டுகிறது என்றும் மக்கள் சாதாரணமாகக் கூறுவதுண்டு, இல்லையா?

சத்தியம், தயை, தவம், தானம் ஆகிய நான்கும் தர்மத்தின் பாதங்கள். இந்த நான்கும் யாரிடத்து இருக்கிறதோ அந்த மகான் எந்த யுகத்தில் வாழ்ந்தாலும் கிருத யுகத்தில் மனிதர்தான் என்று உறுதியாகக் கூறலாம். சத்தியத்தை இழந்து தயை, தவம், தானம் ஆகிய மூன்றை மட்டும் கொண்டுள்ள மனிதர் திரேதாயுகத்து மனிதர். முதல் மூன்றையும் இழந்து, தானத்தை (கொடையை) மட்டும் கைக்கொண்டுள்ள மனிதன் கலியுகத்து மனிதன். ஆக, யுகங்கள் கூடத் தர்மத்தின் பாதங்களான சத்தியம், தயை, தவம், தானம் (கொடை) இவைகளைப் பொறுத்தே மாறுபடுகின்றன.

இவைகளை எல்லாம் எண்ணிப்பார்க்கும் போது யுகமாற்றங்கள் கூடத் தர்மத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ளன என்பது விளங்கும். அனைத்துக்கும் தர்மமே ஆதாரம். தர்மங்களை அநுசரித்தே குணங்களும் மாற்றமடைகின்றன, கொடுமை நிறைந்த இரண்யககசிபும் கருணைமிக்க பிரகலாதனும் ஒரே யுகத்து (கிருத யுகம்) மனிதர்கள். தர்மமும் சாந்தியும் ஓர் உருவானதைப் போன்ற தர்மராஜாவும், வஞ்சகனான துரியோதனனும் ஒரே யுகம் மனிதர்கள். யுகங்கள் நான்கும் அந்தந்த இயல்புகளைக் கொண்டிருந்தால் இரண்யகசிபு பிரகலாதன், தர்மராஜா - துரியோதனன்- இவர்கள் தர்ம, அதர்ம வழிகளில் செல்ல நேர்ந்திருக்காது அல்லவா? ஆகவே எல்லாவற்றுக்கும் தர்மமே காரணம், தர்மத்தின் பாதங்களைக் கிரகித்துக்கொண்டால் அனைவரும் க்ருத யுகத்தில் மனிதர்களே.

மனிதர்களின் செயல்களே யுக மாற்றத்தையும், தர்ம மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றன. பொற் காலமாவதும், கற்காலமாவதும் இந்த மாற்றங்களைப் பொறுத்ததே.